**ஏப்ரல் – 03**

# TNPSC துளிகள்

- துபாயைப் போலவே, நகரத்தின் முக்கியமான சாலைகளில் உணவு மற்றும் இணைய வழி வணிகப் பொருட்கள் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள இணைய வழி மூலம் திரட்டப் படும் தொழிலாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வு அறைகளைக் கட்டமைப்பதற்குப் பெருநகர சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.
- மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்படும் கருணை மனுக்களை கையாள்வதற்காக மகாராஷ்டிரா அரசு கூடுதல் செயலாளர் (உள்துறை) தலைமையின் கீழ் ஒரு பிரத்தியேகப் பிரிவை அமைத்துள்ளது.
- ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இயக்கக் கூடிய வகையிலான ஆயுத தளத்தின் பீரங்கி எதிர்ப்பு நாக் எறிகணை அமைப்பு (NAMIS) மற்றும் ஆயுதப் படைகளுக்குச் சுமார் 5,000 இலகுரக வாகனங்கள் ஆகியவற்றைச் சுமார் 2,500 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்வதற்காக வேண்டி பாதுகாப்புத் துறை அமைச்சகமானது பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- பியானோ இசைக் கருவியில் உள்ள 88 பொத்தான்களின் எண்ணிக்கை காரணமாக, உலகப் பியானோ தினம் ஆனது ஆண்டின் 88 ஆம் நாளான மார்ச் 28 ஆம் தேதி (லீப் ஆண்டாக இருந்தால்) அல்லது மார்ச் 29 ஆம் தேதி அனுசரிக்கப் படுகிறது.
- பிரதமரான பிறகு முதல் முறையாக இந்தியப் பிரதமர் மோடி நாக்பூரில் உள்ள RSS தலைமையகத்திற்கு வருகை புரிந்துள்ளார்.
    - அடல் பிஹாரி வாஜ்பாய் 2000 ஆம் ஆவது ஆண்டில் மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவி வகித்த போது இங்கு வருகை தந்தார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 7 பேரூராட்சி அமைப்புகளின் அந்தஸ்து மேம்பாடு




- தமிழ்நாடு மாநில அரசானது, ஏழு பேரூராட்சி அமைப்புகளை நகராட்சிகளாக தரம்

உயர்த்தியுள்ளது.

- போளூர், செங்கம், கன்னியாகுமரி, சங்ககிரி, கோத்தகிரி, அவினாசி மற்றும் பெருந்துறை ஆகியப் பேரூராட்சிகள் அதிகாரப்பூர்வமாக நகராட்சிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன.
- 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த நகராட்சிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- கடந்த நான்கு ஆண்டுகளில் மாநில அரசு ஆனது, 10 புதிய மாநகராட்சிகளையும் 31 நகராட்சிகளையும் உருவாக்கியுள்ளது.
- 149 பஞ்சாயத்துகள், 4 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகள் ஆகியவை மொத்தம் 16 மாநகராட்சிக் கழகங்களுடன் இணைக்கப்படும் செயல்முறையில் உள்ளன.
- இந்த இணைப்பு மற்றும் தரம் உயர்த்துதல் செயல்முறையானது முடிவடைந்ததும், இந்த மாநிலத்தில் பெருநகரச் சென்னை மாநகராட்சி உட்பட 25 நகராட்சிகள், 146 நகராட்சிகள் மற்றும் 491 பேரூராட்சிகள் இருக்கும்.

## போதைப் பொருள் பழக்க மறுவாழ்வு மையங்களுக்கான சில குறைந்தபட்ச தர நிலைகள்

**WHAT THE RULES SAY**

**Rules for running de-addiction and rehabilitation centres are:**


- No patient can be compelled to undergo treatment without his consent
- Nursing and other staff should be duly qualified
- Officer in charge of such a centre should be a qualified psychiatrist or an MBBS doctor
- If a doctor is in-charge, then the centre should have a psychiatrist on its rolls who visits it at least once a week
- It should have ambulance facility
- The centre must ensure round-the-clock medical care to patients
- There should be additional rooms for individual counselling, group therapy
- Confidentiality of patients is to be maintained
- Requisite number of beds (one for each patient)
- Fresh and nutritious meals

- தமிழ்நாடு மாநில மனநல மற்றும் சுகாதார நலன் குறித்த போதைப் பொருள் ஒழிப்பு மையங்களுக்கான 2025 ஆம் ஆண்டு குறைந்த பட்சத் தர நிலைகள் விதிமுறைகளை மாநில அரசு அறிவித்துள்ளது.
- இந்த விதிமுறைகளானது 2017 ஆம் ஆண்டின் மனநலப் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.
- இது, அவை வழங்கும் பல சேவைகளின் அடிப்படையில் அந்த மையங்களை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது:
  - விரிவான போதைப் பொருள் பழக்க மறுவாழ்வு மையங்கள் (CDC) மற்றும்
  - போதைப் பொருள்களின் தவறான பயன்பாடு தொடர்பான பிரச்சினை உள்ள நபர்களுக்கான மறுவாழ்வு மையங்கள் (RC).

- CDC மையங்கள் ஆனது நச்சுத் தன்மை நீக்கம் மற்றும் மறுவாழ்வு சேவையை வழங்கும் என்ற நிலையில் RC மையங்கள் முக்கியமாக நச்சு நீக்கத்திற்குப் பிறகான உளவியல் ரீதியான சேவைகளை வழங்கும்.
- அனைத்து மையங்களும் மாநில மனநல ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

# தேசியச் செய்திகள்

## நீதிபதிகளின் சொத்துக்கள் குறித்த தகவல்களை வெளியிடுவதற்கான விதிகள்




- இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 13 சதவீதம் பேர் மட்டுமே தங்கள் சொத்துக்கள் குறித்தத் தகவல்களை அறிவித்துள்ளனர்.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப் படி, உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட 34 நீதிபதிகளும், உயர் நீதிமன்றங்களில் சுமார் 1,100 நீதிபதிகளும் உள்ளனர்.
- இவர்களில், சுமார் 98 நீதிபதிகள் மட்டுமே, அதிலும் மிகப்பெரும்பான்மையாக கேரளா, பஞ்சாப் - ஹரியானா மற்றும் டெல்லி உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மட்டுமே தங்கள் சொத்துக்கள் குறித்த தகவல்களை மிகவும் வெளிப்படையாக வெளிப்படுத்தி உள்ளனர்.
- 1997 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றமானது, நீதிபதிகள் தங்கள் பெயர்கள், அவர்களின் மனைவியின் பெயர்கள் அல்லது அவர்களை சார்ந்திருப்பவர்களின் பெயர்களில் உள்ள அசையாச் சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் உட்பட அனைத்து விதச் சொத்துக்களையும் தலைமை நீதிபதி முன்பாக அவர்கள் அறிவிக்க வேண்டும் என்ற விதிமுறைகளை ஏற்றுக் கொண்டது.
- இது நீதிபதிகளின் சொத்துக்களை பொது வெளியில் / மிகவும் பகிரங்கமாக வேண்டி வெளியிடுவதற்கான விதிமுறை எதுவும் அல்ல, மாறாக தலைமை நீதிபதிக்கு மட்டுமே அதனை வெளிப்படுத்துதல் ஆகும்.
- 2009 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் ஆனது நீதிபதிகளின் சொத்து அறிவிப்புகளை அதன் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் தானாக முன்வந்து வெளியிட முடிவு செய்தது.
- பணியாளர்கள், பொது மக்கள் குறை தீர்ப்பு மற்றும் சட்டம் மற்றும் நீதித்துறைக்கான பாராளுமன்றக் குழுவானது, நீதிபதிகளின் சொத்துக்களைத் தாமாக அறிவிப்பதை ஒரு கட்டாயமாக்கும் சட்டத்தினைப் பரிந்துரைத்தது.

## இம்ரான் பிரதாப்காதி எதிர் குஜராத் மாநில வழக்கு

- காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) இம்ரான் பிரதாப்காதிக்கு எதிரான குஜராத் காவல்துறை வழக்கை ரத்து செய்து இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

வழங்கியுள்ளது.


❖ சமூக ஊடகங்களில் ஒரு பிரச்சினையினைத் தூண்டும் வகையில் ஒரு கவிதையை வெளியிட்டதற்காக அவர் மீது இந்த வழக்கு தொடரப்பட்டது என்ற ஒரு நிலையில் இந்தத் தீர்ப்பானது பேச்சு சுதந்திரத்திற்கு ஆதரவான ஒரு வரவேற்கத்தக்க தலையீடு ஆகும்.

❖ பாரதீய நியாய சன்ஹிதா சட்டத்தின் 196 (IPC பிரிவு 153A) என்ற ஒரு பிரிவினைப் பயன்படுத்த முடிவு செய்யும் காவல்துறை அதிகாரிகளுக்கு இந்தத் தீர்ப்பு ஒரு வழி காட்டியாக இருக்கும்.

❖ 196 என்ற பிரிவானது மதம், இனம், பிறந்த இடம், வசிப்பிடம், மொழி போன்றவற்றின் அடிப்படையில் வெவ்வேறுக் குழுக்களிடையேப் பகைமையை ஊக்குவித்தல் மற்றும் நல்லிணக்கத்தைப் பேணுவதற்குப் பாதகமான செயல்களைச் செய்தல் தொடர்பான சில விதிமுறைகளைக் கொண்டுள்ளது.




## எண்ணிம வழிப் பயிர்க் கணக்கெடுப்பு (DCS) அமைப்பு




❖ கைபேசி இடைமுகம் வழியாக பயிர் விதைப்பு விவரங்களைச் சேகரிப்பதற்காக என வயலில் இருந்து நேரடியாகத் தரவுகள் பெறப்படுவதை உறுதி செய்கின்ற எண்ணிம வழி பயிர்க் கணக்கெடுப்பு (DCS) அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

❖ இந்த தரவுத் தளம் ஆனது, ஒவ்வொரு வேளாண் நிலத்திற்கும் துல்லியமான, நிகழ்நேர பயிர் பரப்பளவுத் தகவல்களை வழங்குகிறது என்பதோடு இது துல்லியமான உற்பத்தி மதிப்பீட்டை அடைய உதவும்.

❖ 14 மாநிலங்களில் உள்ள 435 மாவட்டங்களில் உள்ள 3 லட்சம் கிராமங்களில் 23 கோடி நிலங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன/வரைபடமாக்கப்பட்டுள்ளன.

❖ பயிர் விதைப்பு பரப்பின் கையேட்டு மதிப்பீட்டிலிருந்துப் பதிவான ஏக்கர் பரப்பில் 19

சதவீதம் அதிகரிப்பு பதிவாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், அசாம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய சில மாநிலங்கள் ஒவ்வொன்றும் கடந்த ஆண்டின் காரீஃப் பருவத்தில் தங்கள் இலக்கு நிலங்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமான நிலங்களின் மதிப்பீட்டினை நிறைவு செய்து ஒரு சிறப்பான செயல்திறன் கொண்ட மாநிலங்களாக உள்ளன.
- குஜராத் மற்றும் ஒடிசா ஆகிய இரு மாநிலங்களும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 50 சதவீதத்திற்கும் அதிகமான நிலங்களின் மதிப்பீட்டினை நிறைவு செய்துள்ளன.

### இந்தியத் துறைமுக மசோதா 2025




- இந்திய மக்களவையானது '2024 ஆம் ஆண்டு கடல் வழி சரக்குப் போக்குவரத்து' என்ற மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது, நாட்டின் கடல்சார் துறையில் சட்டபூர்வக் கட்டமைப்பை நவீன மயமாக்கவும் புதுப்பிக்கவும் முயல்வதோடு, வணிகம் செய்வதை மிக எளிதாக்கவும் முயல்கிறது.
- இந்த மசோதாவானது காலனித்துவக் காலச் சட்டமான 1925 ஆம் ஆண்டு கடல் வழி சரக்குப் போக்குவரத்துச் சட்டத்திற்கு மாற்றாக அமைகிறது.
- இந்த மசோதா துறைமுகங்களில் மாசு கட்டுப்பாடு, பேரிடர் மேலாண்மை, அவசரகால நடவடிக்கை, பாதுகாப்பு, வழிசெலுத்தல் மற்றும் தரவு மேலாண்மை போன்ற பல்வேறு முக்கியமான அம்சங்களைக் கையாள்கிறது.
- இது சர்வதேசக் கடமைகள் மற்றும் கடல்சார் உடன்படிக்கைகளுடனான இந்தியாவின் இணக்கத்தினை உறுதி செய்வதற்கும் முயல்கிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### நிலா செயற்கைக்கோள்

- சிறிய செயற்கைக்கோள் உற்பத்தி நிறுவனமான HEX20 ஆனது, 'நிலா' எனப்படும் அதன் முதல் செயற்கைக்கோளினை விண்ணில் ஏவுவதற்காக வேண்டி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்த மாநிலத்தின் முதல் புத்தொழில் நிறுவனமாக மாறி உள்ளது.

- கேரளாவின் மிக நீளமான நதியின் பெயரிடப்பட்ட இந்தச் செயற்கைக்கோள் ஆனது, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் Transporter 13 விண்வெளிகலன் மூலம் விண்ணில் ஏவப் பட்டது.
- HEX20 நிறுவனமானது எந்தவொருக் குறிப்பிட்ட நுட்பமும் சாராதச் செயற்கைக்கோள் தளங்களை உருவாக்குகிறது என்பதோடு மேலும் அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு சுற்றுப் பாதையில் அதந செயல்விளக்கத்திற்கான கருவிகளின் சில நிலை நிறுத்தல் திறன்களை கொண்ட ஒரு செயற்கைக்கோள் சேவையினையும் வழங்குகிறது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### இரண்டாவது தேசிய மரபணு வங்கி





- மத்திய அரசானது, நீண்டகால உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை நன்கு உறுதி செய்வதற்காக 29 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது தேசிய மரபணு வங்கியை (NGB) நிறுவுவதாக அறிவித்துள்ளது.
- புது டெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) தேசிய தாவர

மரபணு வள வாரியத்தில் (NBPGR) அமைந்துள்ள முதல் தேசிய மரபணு வங்கியாகும்.

- தற்போது இது சுமார் 2,157 இனங்களின் 4,71,561 மதிப்பீடுகளைக் கொண்ட உலகின் இரண்டாவது பெரிய மரபணு வங்கி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குழந்தை உயிரிழப்பு விகிதத்தின் நிலைகள் மற்றும் போக்குகள் 2024




- ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உயிரிழப்பு மதிப்பீட்டு நிறுவனக் குழுவானது (UNIGME) 2024 ஆம் ஆண்டிற்கான தரவுகளை வெளியிட்டுள்ளது.
- 2000 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதத்தில் சுமார் 70 சதவீதச் சரிவும், பச்சிளம் குழந்தை உயரிழப்பு விகிதத்தில் 61 சதவீதச் சரிவும் பதிவாகியுள்ளது.
- கருவில் உள்ள குழந்தைகளின் உயிரிழப்பு விகிதத்தை 60-70 சதவீதம் என்ற அதிக வரம்பு வரை குறைத்த முதல் 10 நாடுகளில் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.
- 2000-2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகளவிலான 37 சதவீதக் குறைப்புடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் கருவில் உள்ள குழந்தைகளின் உயிரிழப்பு விகிதத்தில் 60.4 சதவீதம் சரிவு பதிவாகியுள்ளது.
- உலகளவில், 2022 ஆம் ஆண்டில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மீதான உயிர் இழப்புகளின் வருடாந்திர எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் பதிவான ஒரு மதிப்பீட்டில் 9.9 மில்லியனில் இருந்து 4.9 மில்லியனாகப் பாதிக்கும் மேலாகக் குறைந்துள்ளது.
- 2000 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலக நாடுகளானது 221 மில்லியன் குழந்தைகள், இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை இழந்தது.
- ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புப் போக்கானது, 2000 ஆம் ஆண்டில் 41 சதவீதத்திலிருந்து 2022 ஆம் ஆண்டில் 47% ஆக அதிகரித்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தான் தினம்

- 1949 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று, ஜெய்ப்பூர், ஜோத்பூர், பிகானேர் மற்றும்

ஜெய்சால்மர் ஆகிய நான்கு சுதேச அரசுகள் ஒன்று சேர்த்து இராஜஸ்தான் உருவாக்கப் பட்டது.

- இந்த ஆண்டில் அம்மாநில அரசு ஆனது ராஜஸ்தான் தினம் தற்போது ஆண்டு தோறும், இந்து நாட்காட்டியின் முதல் நாளான சைத்ர சுக்ல பிரதிபதாவில் கொண்டாடப்படும் என்று அறிவித்து ஒரு நாட்காட்டி மாற்றத்தை அறிவித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் அந்தத் தினம் மார்ச் 30 ஆம் தேதியன்று வருகிறது ஆனால் அடுத்து எதிர்வரும் ஆண்டுகளில் இந்த தேதி மாறுபடும்.
- உதாரணமாக, 2026 ஆம் ஆண்டில், சைத்ர பிரதிபதா மார்ச் 19 ஆம் தேதியன்று அது வருகிறது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2025 ஆம் ஆண்டு வின்ட்ஹாம் கேம்ப்பெல் பரிசு




- யேல் பல்கலைக்கழகம் ஆனது, 2025 ஆம் ஆண்டு வின்ட்ஹாம்-கேம்ப்பெல் பரிசுகளை பெறும் எட்டு நபர்களின் பெயர்களை அறிவித்துள்ளது.
- இது உலகின் மிக முக்கியமான சர்வதேச இலக்கிய விருதுகளில் ஒன்றாகும்.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஷ் எழுத்தாளர் இராணா தாஸ்குப்தாவுக்கு

அவரது புனைவுக் கதை அல்லாத கதைக்காக இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

- தாஸ்குப்தா Tokyo Cancelled மற்றும் Solo நாவல்களின் புதினங்களின் ஆசிரியர் ஆவார்.
- இந்தியாவில் இலக்கியத்திற்கான JCB பரிசினை உருவாக்கிய ஒரு இயக்குநராக அவர் திகழ்ந்தார்.

# இதரச் செய்திகள்

## அதிக ஒளிச்செறிவு கொண்ட விளக்குகளைப் பயன்படுத்தி மீன் பிடித்தல்

- அதிக ஒளிச்செறிவு கொண்ட விளக்குகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் முறை / லைட் ஃபிஷிங் முறையானது மீன் மற்றும் கணவாய் மீன்களை மேற்பரப்புக்கு ஈர்க்க அதிக சக்தி வாய்ந்த செயற்கை விளக்குகளைப் பயன்படுத்தும் நுட்பமாகும்.
- இந்த நுட்பம் ஆனது, மிகப் பெரும்பாலும் இளம் மீன்கள் மற்றும் இலக்கு அல்லாத உயிரினங்களை ஈர்த்து அதிகப்படியான மீன்பிடித்தலுக்கு வழிவகுக்கிறது.
- இம்முறையானது 2017 ஆம் ஆண்டு முதல் இந்தியாவின் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் (EEZ) தடைசெய்யப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற சில மாநிலங்களில், பிராந்திய நீர்நிலைகளிலும், விதிகள் உள்ள இடங்களிலும் இந்த மீன்பிடித்தல் முறை முற்றிலுமாக தடை செய்யப் படவில்லை.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★